https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# வ. உ. சி.யின் மறக்கவொண்ணா தமிழ்த் தொண்டுகள்

**முனைவர் ம. தாமரைச்செல்வி**
இணைப்பேராசிரியர் - தமிழ்த்துறை
ஒருங்கிணைப்பாளர் - பிற மொழிகள் துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி
மீனம்பாக்கம், சென்னை- 600 061

## ஆய்வுச் சுருக்கம்

*வ. உ. சிதம்பரனார் (வ.உ.சி.) ஒரு சிறந்த விடுதலைப் போராளியும், தமிழ் மொழிக்கு பெரும் பங்களிப்பும் அளித்தவர்."கப்பலோட்டிய தமிழன்" என்று அழைக்கப்படும் இவர், தமிழில் உரைநடை, கவிதை, மொழிபெயர்ப்பு, இலக்கிய விமர்சனம் போன்ற பல துறைகளிலும் தொலைநோக்குடன் பணி புரிந்தவர். அவர் பாரதியாருடன் சேர்ந்து சுதந்திரம், சமூகவிழிப்புணர்வு போன்ற கருத்துகளைத் தமிழில் உரைத்தவர். திருக்குறள், திருவாசகம் போன்றவற்றை எளிய தமிழில் விளக்கியதும், தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை தம் இலக்கியங்கள் ஊடாக மக்களிடையே கொண்டு செல்ல முனைந்தவர். மேலும், செய்தித்தாள்கள், உரைவீச்சுகள், கட்டுரைகள் ஆகியவற்றின் மூலம் தமிழ் மொழியைக் கொண்டு சமூக சிந்தனையை ஏற்படுத்த முயன்றவர். அவருடைய எழுத்துகளில் இருந்த தேசபக்தி உணர்வு, தமிழ் மொழியின் செம்மையை வெளிக்கொணர்ந்தது. அவர்தம் தமிழ்ப்பணியை ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.*

## கருச்சொற்கள்

*மொழிக்கான வித்து - வழக்கற்ஞராக வ.உ.சி. - வ.உ.சியின் விடுதலை வேட்கை - மெய்யறம் - மெய்யறிவு - பாடல் திரட்டு – சுயமரியாதை -* **வ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் - மொழி பெயர்ப்பாளராக வ.உ.சி.** *தமிழின் புதிய சகாப்தம் வ.உ.சி*

## முன்னுரை

*திருநெல்வேலி மாவட்டம் தமிழன்னைக்கு அளித்த தவப்புதல்வர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. ஒட்டப்பிடாரத்தில்1872 – ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் உலகநாதப் பிள்ளைக்கும் பரமாயி அம்மாளுக்கும் அவதரித்தத் தியாகச்சுடர். ஆங்கிலேயர்களின் அதிகாரச் செருக்கைத் துணிச்சலாக எதிர்த்து நின்ற மாபெரும் விடுதலைப் போராளியாக மட்டும் இல்லாமல் இலக்கிய உலகின் மேதையாகவும் திகழ்ந்தவர்.*

## மொழிக்கான வித்து

*வீரப்பெருமாள் அண்ணாவியாரை ஆசிரியராகக் கொண்டு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்ற வ.உ.சி. தமிழ்ச்சுவையோடு கூடிய தமிழுணர்வைத் தம் ஆசிரியரிடமிருந்து பெற்றார். அவர் நூல் பல கண்ட தமிழறிஞராய் விளங்குவதற்கு இதுவே அடிப்படையாய் அமைந்தது. ஆசிரியர் கிருஷ்ணன் என்பவர் மூலமாக ஆங்கிலத்தில் புலமை பெற்றார்.*

## வழக்கறிஞராக வ.உ.சி

*திருச்சியில் சட்டக்கல்வி பயின்ற வ.உ.சி, 1895இல் ஒட்டப்பிடாரத்தில் கிரிமினல் வழக்கறிஞராகத் தடம் பதித்தவர். பொய் வழக்கால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில்*

வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர்.

### வ.உ.சியின் விடுதலை வேட்கை

நாடு அந்நியரிடம் அடிமைப்பட்டிருப்பதை எண்ணி வருந்திய வ.உ.சி. தன்னை முழுமையாகத் தேசவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். நாளடைவில் திலகரோடு ஏற்பட்ட நட்பின் எதிரொளியாக அவருடைய தீவிர கொள்கைகளைத் தமிழ் நாட்டிடையே பரவச்செய்தார். இவரின் விடுதலைக் கனல் தெறிக்கும் பேச்சைக் கேட்க, பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூட ஆரம்பித்தனர்.

**"சிதம்பரம்பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர் பெற்று எழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்.1908ஆம் ஆண்டு சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்த தீர்ப்பில் நீதிபதி ஃபின்ஹே எழுதியுள்ள வரிகளே இவை. வ.உ.சி.யின் விடுதலை வேட்கைக்கும் வேகத்துக்கும் இதனை விடச் சிறந்த அங்கீகாரத்தை வேறு எவரும் தந்துவிட முடியாது".** (https://tamil.webdunia.com/independence-day-2009) இனியும் அவரை வளர விட்டால் தங்களுக்கு ஆபத்து என்றுணர்ந்த ஆங்கிலேயர் அவரை எப்படியாவது சிறை பிடித்திட திட்டமிட்டனர். திருநெல்வேலி கலெக்டரின் துணையுடன் ராஜதுரோகக் குற்றஞ் சுமத்திக் கைது செய்தனர். கோயம்புத்தூர், கண்ணனூர் ஆகிய சிறைகளில் செக்கிழுத்தல், கல்லுடைத்தல் ஆகிய தாங்கொணாத் துயரங்களை அனுபவித்தார். தனக்காகவோ, தன் வீட்டுக்காகவோ அல்லாமல் தாய் நாட்டின் விடுதலைக்காக கொடூரங்களை அனுபவித்த பெருந்தகை சிறையிலிருந்து விடுதலைப் பெற்று வருகையில், அவரை வரவேற்க சுப்பிரமணிய சிவா ஒருவர் மட்டுமே வந்திருந்தார். மக்களின் மனமாற்றங்களைக் கண்டு மனம் தளர்ந்த வ.உ.சி அரசியலிலிருந்து முழுமையாக விலகினார். வாழ்வின் இறுதி வரை தமிழே அவர் வாழ்வாயிற்று. அரசியல் தொண்டு வழி பேச்சுத் தமிழை வளர்த்த வ.உ.சி. அரசியல் துறவு வழி இலக்கியத் தமிழை வளர்த்தார்

### நூல்கள்

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவை 1.மெய்யறம் 2.மெய்யறிவு 3.பாடல் திரட்டு 4.சுயசரிதை. கண்ணனூர் சிறையில் அடக்கப் பட்டிருந்த போது மெய்யறிவு, மெய்யறம் என்னும் இரண்டு நூல்களைப் படைத்தார்.

### மெய்யறம்-1914

மெய்யறம் ஐந்தியலும் 125 அதிகாரங்களயும் உடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களைக் கொண்டது. ஒரு பாடல் என்பது ஒரு வரி மட்டுமே உடையது. முதல் பகுதி மாணவர்களுக்கானது. அதில் 30 அதிகாரங்கள் உள்ளன. இரண்டாவது பகுதி இல்லறத்தார்களுக்கானது. அதுவும் 30 அதிகாரங்கள் உடையது. மூன்றாவது பகுதியில் ஓர் அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று 50 அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளது. நான்காவது பகுதி 10 அதிகாரங்களுடன் அந்தணவியல் குறித்து விளக்குகிறது. கடைசிப் பகுதியில் உண்மையை அடைவது எப்படி என்று 5 அதிகாரம் கொண்ட மெய்யியலில் வ.உ.சி. விளக்குகிறார்.

### மெய்யறிவு-1915

வ.உ.சி. கண்ணணூர் சிறையில் இருக்கும் போது மற்ற கைதிகளுக்கு நீதி, நெறிகளை விளக்குவார். அக்கைதிகள் இந்த அறிவுரைகள் செய்யுள் வடிவில் இருந்தால் மனனம் செய்ய எளிதாக இருக்கும் என்று வ.உ.சி. யிடம் கூறினார்கள். அவ்வாறு இயற்றப்பட்ட செய்யுள்களே மெய்யறிவு என்ற நூலாகும். அது 10 அதிகாரங்கள் உடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 செய்யுள்கள் உடையது. ஒவ்வொருசெய்யுளும் 4 வரிகள் உடையது. இந்த நூலில் வ.உ.சி தன்னை அறிந்து கொள்வது எப்படி, நம் விதியைத் தீர்மானிப்பது எவ்வாறு, ஆரோக்கியத்தைப் பேணும் முறைகள், மனதை ஆளுவது எங்ஙனம், நம் மனத்தில் தீய எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங்களை ஏற்படுத்துவது எப்படி, உண்மை நிலையை என்ன செய்ய வேண்டும் என்று விளக்குகிறார்.

### பாடல் திரட்டு-1915

இந்நூல் பல சந்தர்ப்பங்களில் வ.உ.சி. எழுதிய பாடல்களின் தொகுப்பாகும். இது அவரது தலை சிறந்த படைப்பாகும். **"வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் இயற்றிய பாடல்திரட்டு: முதல் பாகம் - பிள்ளையவர்கள் சிறைக்குச் செல்வதற்கு முன் பாடிய தனிப்பாடல்கள். இரண்டாம் பாகம்: பிள்ளையவர்கள் சிறையில் வசித்த காலத்தில் பாடிய தனிப்பாடல்கள் -** (இந்தியாபிரிண்டிங்வொர்க்ஸ்,சென்னை. 1915)

இந்நூலுக்கான சிறப்புப் பாயிரத்தில் ‘இந்நூலிலுள்ள ஈகை, அன்பு, உண்மை முதலிய ஒழுக்கப்பாக்களும் பதி பசுச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவல் தொழிலை அளித்தல் முதலிய ஞானப் பாக்களும் படிக்கப் படிக்க மிகுந்த சந்தோஷத்தை விளைக்கின்றன. ஸ்ரீமான் பிள்ளையவர்களும் அவர்களது நூலும் பிறவும் நீடூழி நின்று வாழ்க (சிந்தாதிரிப் பேட்டை, சென்னை – ஆனந்த தை 25 உ – நிரதிசய பாலசுந்தர சுவாமி) (Project Madurai, மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம்)

இந்நூலுக்கான பாயிரத்தில் வ.உ.சி கூறியிருப்பதாவது:

இப்புத்தகத்திலுள்ள முந்நூற்றெண்பது பாக்களில் ஏறக்குறைய ஒரு நூறு கடவுளைப்பற்றிக் கூறுவன; மற்றொரு நூறு ஒழுக்கம் முதலியவற்றைப் பற்றிக் கூறுவன; மீத நூற்றெண்பதும் எனது சுற்றத்தார் களுக்கும் நண்பர்களுக்கும் யான் எழுதியவை. யான் சிறையில் சுகமாயிருந்து படித்தற்கும் எழுதுதற்கும் எண்ணரிய உதவிகள் புரிந்து யான் அங்கிருந்து எழுதியனுப்பிய நூல்களையும் பிறவற்றையும் பாதுகாத்து வைத்திருந்து யான் வெளிவந்த பின்னர் என்னிடம் தந்து கோயம்புத்தூரில் இனிது வாழ்ந்து வரா நின்ற எனது மெய்த்தம்பி சிரஞ்சீவி கோ.அ. இலக்குமண பிள்ளைக்கும் யான் சிறையுள் புகுந்த நாள்முதல் எனது குடும்பத்தாருடைய சரீரப் பாதுகாப்பிற்கும் எனது நூல்கைளை அச்சிடுவதற்கும் பொருள் உதவிக் கொண்டு தென் ஆப்பிரிக்காவில் இனிது வாழ்ந்துவரா நின்ற எனது மெய்ச்சகோதரர் ஸ்ரீமாந் சொ.விருத்தாசலம் பிள்ளையவர்களுக்கும் ஸ்ரீமாந்.த. வேதியப் பிள்ளையவர்களுக்கும் யானும் எனது குடும்பத்தாரும் நன்றியறிதலு ள்ளவராயிருக்கக் கடைமப்பட்டுள்ளோம். திருமயிலை, சென்னை. (வ. உ. சிதம்பரம் பிள்ளை. ஆனந்த தை 11)

### சுயசரிதை-1946

இந்நூல் இரண்டு பகுதிகளை உடையது. முதல் பகுதி 1916ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அதில் அவர் தனது குழந்தைப் பருவம், ஆசிரியர்கள், குடும்பம், சட்டக்கல்வி ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இரண்டாவது பகுதி 1930ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. அதில் கோயம்பத்தூர் சிறை வாழ்க்கை, சிறை அதிகாரி மீது தாக்குதல், சிறையில் ஏற்பட்ட கலவரம், கண்ணணூர் சிறை வாழ்க்கை, ஆசு கொலை, விடுதலை இவை குறித்து விளக்குகிறார். அவர் இறந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1946ஆம் ஆண்டு இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஒரே நூலாக வெளி வந்தது.

### உரை எழுதிய நூல்கள்

வ.உ.சி. இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதி உள்ளார்.

### இன்னிலை-1917

வ.உ.சி. ரத்தினக் கவிராயர் எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு விளக்க உரை எழுதினார். அந்த நூலைப் படிக்கும் போது அவரது இலக்கணப் புலமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

### சிவஞான போதம்-1935

முறையாகத் தமிழ்க் கற்றவர்களும் உரை காண்பதற்குத் தயங்கக் கூடிய சாத்திர உலகில் நுழைந்து, பொது மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக உரை வழங்குவது அரிதான செயல். “இறைவனை யும், உயிரையும் பற்றிப் பேசும் சிவஞான போதத்தின் பொருள் உணர்ந்து அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காகத் தானே முயன்று உரை எழுதியதாகவும், அது நிறைவேற இறைவன் துணைபுரிய வேண்டும்” என்றும் வ.உ.சி குறிப்பிட்டுள்ளார். இதன் வழி வ.உ.சி மெய்ப்பொருளில் நாட்டம் கொண்டவர்; சிந்தனையாளர்; ஆய்வுக் கண்ணோட்டம் உடையவர் என்பது பெறப்படுகிறது.

சிவஞான போதம் ஒரு பக்தி நூலாகும். வ.உ.சி. இந்நூலுக்கு மிகச் சிறந்த விளக்க உரை எழுதியுள்ளார். இந்நூலினை ஆழமாக ஆராய்ச்சி செய்ததில் தத்துவம் மற்றும் பக்தியில் சிறந்தவர் ஆனார். மத வேற்றுமை காண்பவர்கள் "யான், எனது" என்னும் மத வெறி பிடித்தவர்களென்றும் நாடு இருக்கும் ஒற்றுமையற்ற நிலையில் மதவேற்றுமை காண்பது நாட்டு ஒற்றுமைக்குத் தீங்கு ஏற்படுத்தக் கூடியது என்றும் வ.உ.சி. இந்நூலில் கூறுகிறார். அவர் இந்நூலில் மதங்களின் பொய்யான உயர்வு, தாழ்வு குறித்து ஒன்றும் எழுதவில்லை.

### திருக்குறள்-1935

பழந்தமிழ் இலக்கியங்களான திருக்குறள், தொல்காப்பியம் இவற்றின் மீது வ.உ.சி.க்கு அளவு கடந்த பற்று உண்டு. அவரது உரை அவரது ஆழ்ந்த இலக்கண அறிவை

வெளிப்படுத்துகிறது. அவர் பொருள் கூறும் விதம், பல் வேறு உரைகளை ஒப்பிடும் விதம், அவர் தரும் இலக்கணக் குறிப்புகள் இவற்றின் மூலம் அவர் எவ்வளவு பெரிய மேதை என நாம் அறியலாம்.

### வ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்

திருக்குறளையும், தொல்காப்பியத்தையும் வ.உ.சி தம் இரு கண்களெனப் போற்றினார். ஆரியக் கொள்கையை அடியொற்றி விளங்கிய பரிமேலழகர் உரைக்கு மாறாகத் தமிழ்ப் பண்பாட்டைத் தழுவி எழுதப்பட்ட மணக்குடவர் உரையையே வ.உ.சி பெரிதும் போற்றினார். வறுமை நிலையில் இருந்த பொழுதும் மொழிக்கு வளம் சேர்த்த பெருமைக்குரியவர் வ.உ.சி. மணக்குடவர் உரையில் அமைந்த அறத்துப்பாலை மட்டும் பதிப்பித்தார்.இதற்கான பொருளுதவி தென்னாப்பிரிக்கத் தமிழர் வழிப் பெறப்பட்டது என்பதை வ.உ.சி யே குறிப்பிட்டுள்ளார். மேலும் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையை எழுத்துக்கும் பொருளுக்கும் மட்டுமே அவரால் பதிக்க முடிந்தது.

1. திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்)1917
2. தொல்காப்பியம் (இளம்பூரனார் உரையுடன்)-1928

### கட்டுரைகள்

வ.உ.சி பல்வேறு செய்திகளைப் பற்றி வெவ்வேறு பத்திரிக்கைகளில் நிறைய கட்டுரைகள் எழுதியுள்ளார். வ.உ.சி. எழுதிய நூல்கள் பல போதிய நிதி வசதி இல்லாததால் பதிப்பிக்கப்படவில்லை. காணாமல் போனநூல்களுள் சில கிடைத்துள்ளன.

*கடவுளும் பக்தியும்

*கடவுள் ஒருவரே

*மனிதனும் அறிவும்

*மனமும் உடம்பும்

*வினையும் விதியும்

*விதி அல்லது ஊழ்

### வ.உ.சி.யின் அரசியல் சொற்பொழிவு

வ.உ.சி.தலை சிறந்த மேடைப் பேச்சாளர். சேலத்தில் நடந்த மூன்றாவது காங்கரசு மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரை "எனது அரசியல் பெருஞ்சொல்" என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது.

### மொழி பெயர்ப்பாளராக வ.உ.சி.

இளம் பருவத்தில் வேரூன்றிய ஆன்மீகத் தேடல், சிறை வாழ்வில் விழிப்புற்று, ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில மொழிக் காவியங்கள் வழி மலர்ந்தன. அவரின் வாழ்வியல் நெறிமுறைகளும், கொள்கைகளும், கோட் பாடுகளும் அவரை மிகவும் ஈர்த்தன. ஒலிக்கின்ற ஒலியால் வேறுபட்ட மொழி களைக் கொண்ட பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்களை இணைத்துப் பிணைப்பதே மொழிபெயர்ப்பின் அடிப்படை என்பதை உணர்ந்த ஆங்கில மொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்த வ.உ.சி, தன்னை ஈர்த்த ஆலனின் மொழிக்காவியமான “As a man Thinketh” என்னும் காவியத்தை ‘மனம் போல் வாழ்வு’ என்றும் ‘Out from the Heart’ என்னும் நூலினை ‘அகமே புறம்’ என்றும் மொழிபெயர்த்தார். மேலும் The way to Piece என்ற ஆங்கில நூலை ‘சாந்திக்கு மார்க்கம், ’வலிமை மார்க்கம்’ ஆகிய இரண்டு பாகங்களாக மொழிபெயர்த்து வெளியிட் டார். மனம் போல் வாழ்வு பதின்மூன்று பதிப்புகளையும், அகமே புறம் ஆறு பதிப்புகளையும், வலிமைக்கு மார்க்கம் ஒன்பது பதிப்புகளையும் கண்டிருக்கின்றன. ஒவ்வொரு பதிப்பின் போதும் ஆயிரக் கணக்கான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. வ.உ.சி தன் வாழ்நாளிலேயே தமது நூல்கள் பெற்ற செல்வாக்கினைக் கண்டு மகிழும் பேறு பெற்றவர். வ.உ.சி யால் உரை இலக்கியங்கள் தமிழ் மக்களைச் சென்றடை ந்தன.

### மனம் போல் வாழ்வு-1909

ஜேம்ஸ் ஆலனின் "As a man Thinketh" என்ற நூலை வ.உ.சி. "மனம் போல் வாழ்வு" என்று மொழி பெயர்த்தார். ‘மனிதர்களின் எண்ணங்களே அவர்களது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களே விதைகள். செயல்களே மலர்கள். இன்பங்களும் துன்பங்களும் கனிகள். எண்ணங்களே சொற் களாகவும் செயல்களாவும் பழக்கமாகவும் மாறுகின்றன. பழக்கமே ஒரு மனிதனின் ஒழுக்கமாக மாறுகிறது’. (வ.உ.சி. நூல் திரட்டு. பக்க எண் 615.)

### அகமே புறம்- 1914

ஜேம்ஸ் ஆலனின் "Out from the heart" என்ற நூலை வ.உ.சி. "அகமே புறம்" என்று மொழி பெயர்த்தார்.இந்நூல் மனோ நிலைமையின் வலிமையை விளக்குகிறது. ‘நம் மனம் அளவு கடந்த வலிமை உடையது. மனதால் ஒரு மனிதனை ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். அதனால் மனிதன் நல்லவற்றைச்

சிந்திக்கும்படி மனதைப் பழக்கப்படுத்த வேண்டும். அறச் செயல்களே செய்ய வேண்டும். நமது சொற்களைக் கட்டுப்படுத்த வேண்டும். நல்ல மன நிலையிலிருந்து சுகமும் தீய மன நிலையிலிருந்து துக்கமும் ஏற்படுகின்றன. நாம் அறிவுடையவர்களாக இருந்தால் தீய செயல்களைச் செய்ய மாட்டோம்'. (வ.உ.சி. நூல் திரட்டு. பக்க எண் 602.)

### வலிமைக்கு மார்க்கம்-1916

ஜேம்ஸ் ஆலன் எழுதிய "From Poverty to Power"என்ற நூலின் முதல் பகுதி "The part of prosperity" ஆகும். அதனை வ.உ.சி. "வலிமைக்கு மார்க்கம்" என்று மொழி பெயர்த்தார். 'ஒவ்வொரு துன்பமும் ஒரு அனுபவத்தைக் கொடுத்துவிட்டு விரைவில் மறைந்து விடுகிறது. ஆனால் அது ஒரு நல்ல ஆசிரியர். நாம் கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால் அது நமக்கு நல்வழிகளைக் கற்பிக்கும். வலிமை என்பது மகிழ்ச்சி போன்று புற அனுபவம் இல்லை. அது ஓர் உள் அனுபவம். நாம் வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பினால் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் நாமே எதையும் செய்யும் வலிமையுடையவர்களாக இருக்க வேண்டும். ஒருவன் தன்னைத் தானே கட்டுப்படுத்த முடிந்தால் அவனால் மற்றவர்களையும் கட்டுப்படுத்த முடியும்'. (வ.உ.சி. நூல் திரட்டு. பக்க எண் 615; பக்க எண் 652-653.)

### சாந்திக்கு மார்க்கம்-1934

ஜேம்ஸ் ஆலன் எழுதிய "From Poverty to Power" என்ற நூலின் இரண்டாம் பகுதி "The way to peace" ஆகும். அதனை வ.உ.சி. "சாந்திக்கு மார்க்கம்" என்று மொழி பெயர்த்தார். 'ஆத்ம தியானம் கடவுளை அடைவதற்குரிய வழியாகும். தியானமென்பது ஒரு கொள்கையை அல்லது ஒரு விஷயத்தை முற்றிலும் அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆழ்ந்து சிந்தித்தல் ஆகும். அன்பு எல்லாவற்றையும் ஆளக் கூடியது. அடக்கம் கடவுள் தன்மை ஆகும். எவன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொறுமையானவனாகவும், இனிமையானவனாகவும், அன்பானவனாகவும் மன்னிப்பவனாகவும் இருக்கிறானோ அவன் தான் மெய்ப் பொருளை உணர்கிறான். சுய நலத்தைத் துறத்தலும் இறை நம்பிக்கையும் கடவுள் தன்மையை அடைவதற்கு உரியவழிகளாகும். அன்பே நிரந்தரமானது'. (வ.உ.சி. நூல் திரட்டு. பக்க எண் 715; 740; 760; 766.

### தமிழின் புதிய சகாப்தம் வ.உ.சி

வ.உ.சி யின் இலக்கியப் பணி ஒரு மேடைப் பேச்சாளராக, கட்டுரையாளராக, மொழி பெயர்ப்பாளராக, பதிப்பாளராக நின்று விடாமல் தமிழை, தமிழ் இலக்கியங்களை மற்றவருக்கு போதித்த சிறந்த ஆசிரியராகவும் இருந்தார்.

சுவாமி சகஜானந்தருக்கு, பிற்காலத்தில் சிதம்பரத்தில் நந்தனார் கழகம், நந்தனார் பாடசாலை ஏற்படுத்திய அவருக்கு தமிழ் இலக்கியங்கள் மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றைப் போதித்து தமிழ் பயிற்சி ஊட்டினார். ராஜாஜியும் வ.உ.சி யிடம் திருக்குறள் பயின்றதாக சரித்திரம் சொல்லுகிறது.

தம்முடைய வாழ்வின் இறுதி நாட்களில் அன்றாடம் தம்முடைய வீட்டில் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். "தூத்துக்குடி சைவசித்தாந்த சபை" என்ற அமைப்பை நிறுவி கம்பன், திருக்குறள், சிவஞானபோதம், தொடர்பான சொற்பொழிவுகளை பல இலக்கிய அறிஞர்களை வரவழைத்து நடத்தி வந்தார்.

தம்முடைய பேச்சாற்றலால் தமிழுக்குப் புதியதொரு கலையை – 'மேடைத்தமிழ்' என்னும் துறையை வழங்கினார். தம்முடைய ஆன்மிக எழுத்துகளால், பின்னாளில் பல்கிப் பெருகித் தழைத்த 'வாழ்வியல் நூல்கள்' என்ற புதிய துறையைத் தமிழில் தொடங்கி வைத்தார்.

### முடிவுரை

செல்வமும், செல்வாக்குமாக இருந்த காலத்திலும் (1898-1907), வெஞ்சிறையில் வாடிய காலத்திலும் (1908-1912), எல்லாம் இழந்து வறுமையில் வாடிய காலத்திலும் (1913-1936), தமிழை மறவாது, இலக்கியத் தொண்டைத் தம் வாழ்வின் ஓர் அங்கமாகவே கருதி வாழ்ந்த தன்னலமற்ற தேசபக்தரான, கப்பலோட்டிய தமிழரான, திருக்குறள் அன்பரான வ.உ.சிதம்பரம் பிள்ளையின் தமிழ் தொண்டை நாம் மறவாதிருப்போம்.

### குறிப்புதவி நூல்கள்

- தண்டமிழ்ச் சான்றோர், திருமதி இர சூர்யா எம்.ஏ; எம்.எட்., கழக வெளியீடு.
- தமிழ்ச் சான்றோர்கள், இரா. குழந்தை அருள், செந்தமிழ்ப் பதிப்பகம், வில்லிவாக்கம், சென்னை – 49.